DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 218/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : மாணிக்கம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.08.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th August2026.

**எதிரிஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் அக்காவைதான் நான் திருமணம் செய்துள்ளேன். 22.10.2014 ம் தேதி மாலை 5.45 மணியளவில் நானும், எனது மனைவியும் தோட்டத்திற்கு மருந்து அடிக்க சென்றுவிட்டு, வீட்டிற்கு திரும்பினோம். நாங்கள் வீட்டிற்கு வந்து விளக்கை போட்டுப்பார்த்தபோது அது எரியவில்லை. அந்த விளக்கை எரிய வைப்பதற்காக எங்கள் வீட்டில் கம்பை தேடிப்பார்த்தபோது இல்லாததால் என் மாமனார் வீட்டிற்கு சென்று கம்பு கேட்டபோது அவர்கள் இல்லை என்று தெரிவித்தார்கள். அதன்பிறகு நான் கீழத்தெருவிற்கு சென்று அங்கு ஒரு வீட்டில் இருந்து கம்பு வாங்கி வந்து எனது வீட்டில் உள்ள விளக்கை தட்டிவிட்டேன். விளக்கு எரிந்துவிட்டது. அதன்பிறகு ஆஜர் எதிரியின்

அண்ணன் சுப்பிரமணியன் என் வீட்டிற்கு வந்து கம்பு ஒன்று கொடுத்தார். மீண்டும் விளக்கு எரியாமல் போனால் தட்டிவிடுவதற்காக அந்த கம்பை வாங்கிவைத்தேன். அதன்பிறகு ஆஜர் எதிரியின் மனைவி பூங்கொடி என்னிடம் கம்பு கேட்கவந்தார். நான் அதற்கு அந்த கம்பு அடுத்து விளக்கு எரியாமல் போனால் தட்டிவிடுவதற்கு தேவைப்படும் என்று தெரிவித்து மறுநாள் காலை கொடுப்பதாக சொன்னதன்பேரில் பூங்கொடி சென்றுவிட்டார். அதன்பிறகு மாலை சுமார் 6.30 மணியளவில் ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்தார். தேவடியா மவனே என் அப்பனுக்கா பிறந்திருக்க என்று ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக ஏசினார். அதன்பிறகு ஆஜர் எதிரி அவர் வைத்திருந்த கம்பால் எனது தலையில் அடித்துவிட்டார். அதனால் எனக்கு ரத்தம் வந்து மயக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு ஆஜர் எதிரியும், அய்யனுசெட்டியார் என்பவரும் எனது வலது இடுப்போரமும், வலது கால் முழங்காலுக்கு மேலும், எனது வலது குறுக்குப்பக்கமும் அடித்தார்கள். அதன்பிறகு எனது மகன்கள் என்னை மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் சம்பவத்திற்காக புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றார்கள். என்னிடம் காட்டப்படும்புகார் வாக்குமூலம் என்னிடமிருந்து பதிவுசெய்யப்பட்டதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னை இவ்வழகு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் போலீசார் விசாரணையில் 22.10.2014 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் போலீசார் விசாரணையில் எனது மாமனார் வீட்டிற்கு சென்று கம்பு கேட்டது பற்றியும், அவர்கள் தர மறுத்தது பற்றியும், பின்பு கீழத்தெருவிற்கு சென்று கம்பு வாங்கிவந்தது பற்றியும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆஜர்

எதிரியின் அண்ணன் என்னிடம் கம்பு கொண்டு வந்து கொடுத்ததுபற்றி நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவமானது மாலை 6.30 மணியளவில் நடைபெற்றதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். ஆஜர் எதிரி எனது மைத்துனர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு 5 மாத காலத்திற்கு முன்பு எனது மகன் ராமன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மகன் இறந்தபிறகு ரூ.8200 யை ஆஜர் எதிரியிடம் கடன் வாங்கினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு பிறகு நான் சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. என்னுடன் மருத்துவமனைக்கு யார் வந்திருந்தார் என்றால் எனது மகன் ராமசாமி வந்திருந்தார். என்னுடன் வந்த நபர் என்ற விபரத்தை கேட்டு மருத்துவர் எழுதிக்கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இரவு சுமார் 8 மணிக்கு மேல் மருத்துவமனைக்கு சென்றேன். எங்கள் ஊரிலிருந்து சங்கரன்கோவில் அரசு மருத்துமனைக்கு இருசக்கரவாகனத்தில் சுமார் 1/2 மணிநேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்த நபர்களுக்கு இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக தெரிந்திருக்க வாய்ப்புள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த சமயத்தில் அருகாமையில் வேறு யாரும் இல்லை. எனதுவீட்டிற்கு ஒரு தெரு தள்ளி ஆஜர் எதிரியின் வீடு உள்ளதா என்றால் இல்லை. எனது வீடு மேலக்கடைசியில் உள்ளது. ஆஜர் எதிரியின் கீழக்கடைசியில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் நான் அணிந்திருந்த துணியில் ரத்தக்கறை ஏற்பட்டது என்றால் சரிதன். அந்த ரத்தக்கறை ஏற்பட்ட ஆடையை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்ற நாள் அன்று ஆஜர் எதிரியும் காயத்திற்கு சிகிச்சை பெறும்பொருட்டு மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயம் என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரியை காயப்படுத்தியதாக தெரிவித்து எனக்கு எதிராகவும், எனது மனைவி அய்யம்மாள் மற்றும் எனது மகன் ராமசாமி ஆகியோருக்கு எதிராக திருவேங்கடம் காவல்நிலையக்குற்ற எண்.265/2014 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அது பொய்வழக்கு. என்னிடம் கொடுத்த கடனை திரும்ப பெறுவதற்காக ஆஜர் எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று எனது வீட்டிற்கு வந்தார் என்றாலும், அப்போது நானும், எனது மனைவி மற்றும் மகன் ஆகியோரும் அவரை அசிங்கமாக பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்தோம் என்றாலும் சரியல்ல. அப்போது நான் தடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த காயத்தை வைத்து நான் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள நாள் மற்றும் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகார் வாக்குமூலம் என்னிடமிருந்து பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**